**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.22/2013**

2025 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 09 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தர்மராஜ் (அ.சா.3) | தொழில் | : | விவசாயம் |
| த/பெ., க/பெ. | : | திரு.ராமசாமி | வயது | : | 65 |
| கிராமம் | : | கணக்கன்பட்டி | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 09.04.2025 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் கணக்கன்பட்டியில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான். 27.02.2010 அன்று காலை 6.00, 7.00 மணியளவில் மூகாம்பிகை கோவில் அருகில் உள்ள எனது தோட்டத்திற்குப் போனேன். அப்போது போலீசார் கூட்டமாக இருந்தார்கள். நான் போலீசாரிடம் என்ன விபரம் என விசாரித்தேன். அதற்கு அவர்கள் வழிப்பறி நடந்துவிட்டது என்று சொன்னார்கள். லாரியில் வழிப்பறி நடந்துவிட்டது என்பதற்காக என்னிடம் சாட்சிக் கையொப்பம் வாங்கினார்கள். போலீசார் மேப் வரைந்து சாட்சிக் கையொப்பம் போடுமாறு கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டேன். என்னுடன் வந்த நாச்சிமுத்து என்பவரும் சாட்சியாக கையொப்பம் போட்டார். பார்வை மகஜர் அ.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

வரைபடத்தில் சம்பவம் நடந்த திசையை போலீசார் குறிப்பிட்டிருந்ததை பார்த்துத்தான் கையொப்பம் போட்டேனா என்றால் 10 வருடம் ஆகிவிட்டது. அதனால் எனக்கு ஞாபகமில்லை. போலீசார் சொல்லிக்கொடுத்துத்தான் தேதியை சொன்னேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பம் செய்துவிட்டு, பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் எந்த திசையில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிழக்கு திசையில். தினசரி காலை 7.00 மணிக்கு நான் தோட்டத்திற்கு செல்வேன். பெரும்பாலும் என்னுடன் யாரும் உடன் வரமாட்டார்கள். இதுபோன்ற சம்பவங்கள் அப்பகுதியில் அடிக்கடி நடந்துள்ளதா என்றால் அப்படித்தெரியவில்லை. நான் கையொப்பமிடும்போது உடன் இருந்த போலீசார் யார் என்று குறிப்பிட்டுக் கூற இயலுமா என்றால் பல வருடம் ஆகிவிட்டதால் ஞாபகமில்லை. நான் சொல்வதுபோல் ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. காணாமல் போன பணம் எவ்வளவு என்று என்னிடம் யாரும் சொல்லவில்லை. நான் அதைப்பற்றிக் கேட்டுக்கொள்ளவில்லை. பார்வை மகஜரை படித்துப் பார்த்துத்தான் நான் கையொப்பம் செய்தேன்.

**(1,2,6 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை தக்கவைத்துக்கொள்கிறார்கள்).**

**<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

சம்பவம் நடந்தபோது நான் அங்கு இல்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எனக்கு மூகாம்பிகை கோவிலுக்கு மேற்கே தோட்டம் உள்ளது. சம்பவம் நடந்த விபரம் பற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு நான் 8.00 மணிக்குப் போனேன். போலீசார் என்னிடம் கையெழுத்துப்போடும்படி

**கேட்டதால் போட்டேன் என்றால் சரிதான். பார்வை மகஜரில் என்ன விபரம் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.**

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.04.10 12:29:26 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**